**Balasundaram, E:** *சங்ககாலத் தமிழர் பண்பாட்டில் மானுடம், மனிதராய் இருத்தல், ஆழ்நிலை என்னும் கருத்துப் படிவங்கள் - புறநானூறு தழுவிய ஓர் ஆய்வு நோக்கு.*

"*மானுடம்,*" "*மனிதராய் இருத்தல்,*" "*ஆள்நிலை*" என்ற எண்ணக் கருத்துக்கள் பழந்தமிழரின் பண்பாட்டில் எத்தகைய படிமம் பெற்றிருந்தன, சங்காலப் புலவர்கள் அவைபற்றி எத்தகைய புரிந்துகொள்ளல்கள் கொண்டிருந்தார்கள், மக்கள் அவற்றை எவ்வாறு உள்வாங்கித் தம் வாழ்வியலை சீராக்கிக்கொண்டனர் - என்பனபற்றி நுண்ணிதாக அறிந்துகொள்வதன் மூலம் மானுடம் பற்றிய எண்ணக்கரு பழந்தமிழ்ப் பண்பாட்டில் உருவாக்கம் பெற்றிருந்தவாற்றினைப் புரிந்துகொள்ளலாம். அந்த எண்ணக்கருக்களும் கருத்துப் படிமங்களும் தமிழர் பண்பண்பாட்டு வரலாற்றில் எவ்வாறு மாற்றம் பெற்றுவந்துள்ளன என்ற ஆய்வுகளுக்கும் இவ்வாய்வுத் தரவுகள் களம் அமைத்துக் கொடுக்கும் தன்மையன. ஆந்த அடிப்படையில் புறநானூற்றுப் பாடல்களில் இவ்விடயங்கள் எவ்வாறு உருவமும் அழுத்தமும் பெற்றிருந்தன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வீரயுகம் எனக்கருதப்படும் சங்ககாலத்திலே இடம்பெற்றுவந்த தொடர்ச்சியான போர்களினால் இயல்மானுடப் பண்புகள் சீரழிக்கப்பட்டிருந்தன. மானுட அவலங்களையும் அழிவுகளையும் தடுத்து நிறுத்தும் கடமைப்பாடு மானுடம் போற்றிய புலவர்களுக்கு உரியதாயிற்று. அவர்களது பாடல்களில் அக்குறிகோள் தழுவிய ஆற்றுகைகள் முதன்மையும் முனைப்பம் பெற்றிருந்தன. மானுடத்தின் மகிமையையும் மானுடத்தை மழுங்கடிக்காது அரசும் மக்களும் அமைதி வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காகப் புறநானூற்றுப் புலவர்கள் பெரும்முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதற்காக வடக்கிருந்து தம் உயிரையும் ஈகம் செய்திருக்கிறார்கள். மானுடம் தழுவிய மனிதராய் வாழும் வழிவகைகளைத் தமது பாடல்களினூடாக அரசர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஔவையாரின் ''நாடா கொன்றோ காடா கொன்றோ..'' எனவரும் பாடலில் மானுடத்தின் சரிபாதிகளான ஆண், பெண் என்ற பாகுபாட்டில் ஆண்களின் பலமும் பலவீனமும் பேசப்படுகின்றமை ஒரு திருப்புமுனையாகிறது. மானுடம் பற்றிய சிந்தனைகள் புறநானூற்றுப் பாடல்களிலே முதன்மைபெற்றிருப்பதற்குரிய காரணங்கள் ஆராயப்பபட வேண்டியவை. மானுடம் பற்றிப் பேசுவோர்களில் அரசர்களும், (ஆண் - பெண்) புலவர்களும் இடம்பெறுகின்றனர். இவர்கள் எத்தகைய சந்தர்ப்பங்களில் இவைபற்றிப் பாடுகின்றனர் என்பதும் ஆராயப்படத் தக்கவை.

மானுடம் தழுவிய மனிதராய் மக்கள் வாழ்ந்த வகைமைகள், அதற்குரிய வழிவகைகள், மானுடம் தழுவிய வாழ்வியற்சிறப்புக்கள் முதலான விடயங்கள் புறநானூற்றிலே விரிவாகக் கூறப்படுகின்றன. இந்த ஆய்வுப் புலத்தில் புறநானூற்றை ஆராய்ந்து பெறப்படும் தரவுகள், சங்ககாலத்துப் பண்பாட்டுப் படிமத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளத் துணையாவதோடு,

அவை ஏனைய சங்க இலக்கியங்களையும் இந்த அடிப்படையில் ஆய்ந்து சங்ககாலத் தமிழர் பண்பாட்டுப் படிமங்களின் முழுமைத்தன்மையைக் கண்டுகொள்வது அறிஞர் கடமையாகின்றது.